


யாழ்ப்பாணத்தில் வடமராட்சியில் தென்புலோலியில்
புற்றளையில் வாழ்ந்து மறைந்த

அமரர்

# வீரகத்தியார் சுப்பிரமணியம்

அவர்களின் அமரத்துவ

# நினைவு மலர்

**09.06.2005**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் அன்புத்தெய்வத்திற்கு

# சமர்ப்பணம்

புகழ் மிக்க குடும்பத்தலைவனாய்
பண்புநிறைந்த பேரொளியாய்
அன்புடன் எம்மைப் பேணிக்காத்து
மக்களுக்கு ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
எம்மை ஆளாக்கி நல்வழிப்படுத்தி
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தந்தையின் பொன்னடிகளுக்குக்
காணிக்கையாக இம்மலரை
சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்

முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம் பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே

(பட்டினத்தார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மலர்வு 25.04.1919 உதிர்வு 10.05.2005

# அமரர்

# வீரகத்தியர் சுப்பிரமணியம்

**அவர்கள்**

**மறைவுத்திதி பார்த்திப வருடம் வைகாசிமாதம்**
**27ம் திகதி செவ்வாய்க்கிழமை**
**வளர்பிறைத் துதியை**

பாரத்திபவை காசியீயத் தேழ்செவ்வாய் ரோகிணியில்
கீர்த்திபுக ழோடிருந்த ஆசிரியர் தோத்தரித்தே
சுப்பிரம ணியப்பேரார் சிவனவன்தாள் பற்றுதிதி
ஒப்பில்வளர் துதியைதிதி யே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்



## விநாயகர் வணக்கம்

வேண்டுவ தெதுவுமில்லை வேழமா முகவநின்றள்
தீண்டுவ தல்லால்வேறு தெய்வமே யெதுவுமெண்ணேன்
வேண்டுவ தருள்வாயைந்து கரத்திறை யருளாளாயான்
மீண்டுமில் வையந்தன்னில் வந்துதித் திடாதவாறே!

## தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீ புரி நல்வினை பயனிடை முழுமணித்தரங்கள்
மண்ணு காவிரி சூழ் திரு வலஞ்சுழி வாணனை
வாயாரப் பாடியும் ஆதரித்தேத்தியும் வழிபடுமதனாலே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானதந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன்வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

நண்ணினார்க் கினியா யோலம் ஞானநாயகனே மோ
பண்ணவர்க் கிறையே ஒலம் பரஞ்சுடர் முதலே யோலம்
எண்ணுதற்கரியா யோலம் யாவையும் படைந்த யோலம்
கண்ணுதற் பெருமான் நல்கும் கடவுளே ஒலம் ஒலம்

## திருப்புகழ்

இறாவமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறைமாதல் புணர்வோனோ குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப்பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபடு தெய்வ துதி



## புற்றளை விநாயகர் தோத்திரம்

அன்னதானம் மோதகமா யிரமென்றிங்கே
அவித்தவித்துக் கொடுத்துனது அருளைப்பெற்றோர்
எண்ணிலடங் காவடியார்க் கருளுமுன்னை
எப்பொழுதுந் தொழுமடியா ரின்றிங்கில்லை
அன்னவர்சுப் பிரமணியப் பெயரராமே
ஆசிரிய ரெண்பத்தா றகவை வாழ்ந்து
உன்னடிபற் றிடவந்தா ரவருக்குன்றன்
உயர்பதமீந் தருளுபுற்ற ளைப்பேரீசா



## சரவையடி பெரிய நயினார் சிவன் துதி

அரியயனுக் கெட்டாத ஆதியென்னும்
அருவுருவத் திருமேனி யிறையாஞ்சோதி
பெரியநயி னாரெனவே பெயரும்பெற்று
புலோலிதெற்கூர்ப் பதியமர்ந்த தருள்வதற்கே
கரமதுநான் குடையவருட் கருணைவள்ளல்
கழலடிபோற் றிடுமடியா ரவர்களுள்ளே
ஒருவரவ ரின்றில்லை யமரரான
உயர்சுப்பி ரமணியர்க் கருள்வாயீசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஸ்ரீசி ஒல்லை வைரவ தேவர் துதி

சைவமதத் திருக்கோயி லனைத்தினிற்கும்
தானொருகா வற்தெய்வ மாயிருந்து
கைகுவிப்போ ருக்கருளக் கருநாய்மீதே
கடிதில்வரு மருட்தெய்வம் வைரவீசா
தெய்வமுனைப் பணியுமடி யார்களுள்ளே
தானொருவர் சுப்பிரம ணியப்பேராரே
மெய்யடியா ரவர்க்கருள்வாய் மீசியொல்லை
மேவுமருட் சிவரூபா! சரணம் நாமே.



## மந்திகைக் கண்ணகாம்பாள் துதி

உந்தனடி பரமர ரவரின்மாமன்
உயர்வீசுப் பிரமணிய ஆசானிங்கே
பந்தமறுத் தெண்பத்தா றகவைய.்.தில்
பரமபதம் பெற்றமர ரானாரிப்போ
அந்தமனி தரினான்மா கதிபெற்றுய்ய
ஆதிபரா சக்தியுன தருளும்வேண்டும்
மந்திகையிற் கண்ணகையென் றிருக்குந்தாயே
மகாசக்தி யுனைப் பணிந்தோ மருளவர்க்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வல்லிபுர மாயவன் துதி

வல்லிபுர ஆழ்வாரென் றுனைப்பணிந்து
வழிபடுவோர்க் கருளவனாந் திரத்திருந்து
எல்லையிலாப் பத்தர்களை யுனக்காளாக்கி
எப்பொழுதும் வரவழைக்கும் நெடுமால்நீயே
இல்லையுனக் கீடருள்வாய் காக்குந்தெய்வம்
என்றுவரும் பக்தர்களைக் கண்டின்புற்றோம்
வல்லிபுர மாயவனே! வணங்குகின்றோம்
வாவெமதூ ராசானுக் கருள்வதற்கே.

## ஆன்மாசாந்திப் பிரார்த்தனை

சைவத் தமிழ் மகனாய்த் தென்புலோலி யூர்ப்பிறந்து
சான்றாண்மை யோடெண்பத் தாறாண் டினிதிருந்து
செய்ததொழி லாசிரியத் தொழிலதிலே ஓய்வுபெற்று
சிறப்பாகப் பாம்கோழி வளர்த்துழைத்து உயர்ந்தவவர்
ஐவனரநல் மக்களெனப் பெற்றவர்கள் நன்றாக
இல்வாழ்வு வாழவைத்து இறைபதத்திற்கேகுமவர்
செய்கிரியைத் தினமிறையைச் சிந்திப்போம் சிவாயநம
சிவாயநம வெனவோதிச் சிறிதுருவை நினைப்போமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகள் ஒளி வீசும்

அன்புள்ள ஐயாவே! - எமை
அரவணைத்த ஐயாவே!!
பண்புள்ள ஐயாவே!- எங்கள்
பாசமிகு ஐயாவே!!

தோளில் எம்மைத்தூக்கித்தேசம் காட்டிப்
பாரில் எமைப் பேணிப் பக்குவமாய்தான் வளர்த்து
தேரில் எம்மை ஏற்றிவைத்தது போல் உயரவைத்து
ஊரிலே உள்ளவர்கள் உவகையுடன் போற்ற வாழவைத்தீர்கள்

நாம் ஏழும் பெண்களென - நீங்கள்
ஒரு போதும் கலங்கியது கிடையாது - எமை
குபேரன் வீட்டுப்பிள்ளைகள் போல ஊட்டி வளர்த்தீர்கள்
குறையேதும் நீங்கள் வைத்ததில்லை!! நிறைவானவாழ்வமைத்தீர்!

தலைசிறந்த மணாளரை எமக்காகத் தேர்ந்தெடுத்து கரம் பற்ற
வைத்தீர்கள் - எம்
குடும்பத்தின் குதூகலம் கண்டு மனம் மகிழ்ந்தீர்கள்
பேரப்பிள்ளைககளைக் கண்டு அரவணைத்து பிரியமுடன் வளர்த்து
பெரியவராகும் நிலைகண்டு புரித்தீர்
பூட்டனை முத்தமிட்டு ஆசிகள் கூறி
"பாட்டன்" நான் எனக்கூறி இன்புற்றீர்கள்.

வந்த விருந்தினரை வாயார வரவேற்று
அன்பு மொழிகள் பேசிய ஐயாவே!
என்று கேட்போமினி உங்கள் கனிவான பேச்சதனை

உற்றவரோடும் மற்றவரோடும் உளங்கலந்துறவாடி
வேண்டுவோர்க்கு வேண்டுவன செய்த பெருமகனே!
உங்கள் குரல் கேளாமல் எங்கள் காதுகள் செவிடாயின
உங்கள் முகம் காணாது எங்கள் கண்கள் குருடாயின
ஆனாலும் ஐயா
உங்கள் நினைவுகள் எம் இதயத்தில்
என்றும் ஒளி வீசும்
ஐயா நீங்கள் மீண்டு(ம்) வரவேண்டும்
எம்மிடமே ! எம்மிடமே !!

*பிள்ளைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

அமரர் அவர்கள் 10.05.2005 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்கள். புற்றளை கிராமம் சிறந்த ஒரு கல்விமானை இழந்துவிட்டது. அமரர்அவர்கள் மிகவும் நல்லவர் நேர்மை யானவர், சிறந்த கல்விமான் எல்லாவற்றையும் விட புற்றளை சித்தி விநாயகப்பெருமானின் சிறந்த பக்தன்.ஆலயத்தில் நடைபெறும் எல்லாவிதமான உற்சவங்களுக்கும் தவறாது பங்குபற்றுவார். பண்பானவர் மற்றவர்களுக்கு மிகவும் எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர். சுப்பிரமணியம் வாத்தியார் என எல்லோராலும்மிகவும்அன்பாக அழைக்கப்படுபவர். சொல்லப் போனால் இவரது இழப்பு எமது சமூகத்துக்கு, இம்மண்ணுக்கு ஒர் பேரிழப்பாகும். என்ன செய்வது பிறப்பவர் எல்லோருமே என்றோ ஒரு நாள் இறப்பது தானே நியதி அவரும் புற்றளை சித்தி விநாயகப் பெருமானின் திருவடி சேர்ந்துவிட்டார். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தவருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அமரருடைய ஆத்மா சாந்தியடைய புற்றளை சித்தி விநாயகப் பெருமானை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

சோ. ஜெயபாலசுந்தரக்குருக்கள்
(ஆலய பிரதம குருக்கள் புற்றளை
சித்திவிநாயகர் தேவஸ்தானம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியப் பணிமூலம் வழிகாட்டிய பெரியார்

திரு.வீ.சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள் தனது ஆசிரியப் பணிமூலம் சமுதாயத்துக்கான வழிகாட்டியாக விளங்கியுள்ளார். இவர் ஆசிரிய சேவையைத் திருகோணமலை போன்ற வெளிமாவட்டங்களிலும் செய்துள்ளார். இவர் யா/புலோலி மெ.மி பாடசாலையிலிருந்து இடமாற்றம் பெற்று 10.05.1972ம் திகதியிலிருந்து யா/ புற்றளை மகாவித்தியாலயத்தில் தனது பணியைத் தொடங்கியுள்ளார். 25.09.1975ம் திகதி தனது சேவையிலிருந்து இளைப்பாறும் வரை இப்பாடசாலையில் சேவையாற்றியுள்ளார்.

அறிவும், ஆற்றலும், அன்பும், பண்பும் நிறைந்த ஆசிரியராக இவர் திகழ்ந்துள்ளார் என்பதற்கு இவரிடம் கல்விகற்ற மாணவர்களின் கூற்றுக்கள் சான்று பகிர்கின்றன. இவரிடம் கல்விகற்ற மாணவர் பலர் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்குவதற்கு அன்னாரது கற்பித்தலும், மற்றவர்கள் பின்பற்றக் கூடிய முன்மாதிரியான நடத்தைகளும் ஏதுவாக இருந்துள்ளமையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

ஆலயங்களுடன் தன்னை ஈடுபடுத்தி சமய நெறி முறைகளிலும் தனது வாழ்க்கை முறையை இணைத்துக் கொண்டமை அவரது ஆன்மீக ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகின்றது. இன்றும் இக்கிராமத்தில் சமய நெறிமுறைகளும் சமய வாழ்வும் நல்ல முறையில் கைக்கொள்ளப்படுவதற்கு இத்தகைய பல பெரியார்களின் ஆன்மீக வாழ்ந்து காட்டல் முறைகள் பின்புலமாக இருந்துள்ளமையும் மனங்கொள்ளத்தக்கது.

இவ்வழியில் அன்னாரது ஆன்மா தொடர்ந்து வாழ்ந்து எல்லோரையும் வழிநடாத்திக் கொண்டிருக்கும் என்பதை உணர்வோமாக.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**மு. அனந்தேஸ்வரன்.**
**அதிபர்,**
**யா/புற்றளை ம.வி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வாழ்க்கைச்சரிதம்

ஈழவளநாட்டின் வடபாலமைந்த யாழ்க்குடாநாட்டின் கிழக்குப் பாகமான வடமராட்சிப்பகுதியில், தென்புலோலியூரில்,உயர்தமிட்சைவ வேளாண்குல மரபில் வீரகத்தியார் தம்பதியினரின் புதல்வனாக 1919ம் வருடம் திருவாளர் சுப்பிரமணியம் அவர்கள் பிறந்தனர். இவரின் உடன் பிறப்புக்கள் இலட்சுமிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை எனும் என்று பெண் சகோதரிகளாகும்.

இவர் நன்குகற்று, கற்றறிவின் பயனாய் ஆசிரியப் பணிபுரியலானார். தனது 28ம் வயதில் தொழில் வாய்ப்பினைப்பெற்று 1947ம் வருடம் புரட்டாதி மாதம் 16ம் திகதி மூதூர் சிரேஷ்ட பாடசாலையில் ஆசிரியப்பணியை ஆரம்பித்தார் 8வருடகாலம் அப்பாடசாலையில் பணிபுரிந்தபின் வேறுபல கல்லூரிகளிலும் பணியாற்றி தனது 56வது வயதில் 28வருட சேவையின் பின் பணி ஓய்வு பெற்றார். அவ்வூர் சோமசுந்தரம் என்னும் வர்த்தகநிலையக் கணக்காளரின் அன்பு மகளான சரஸ்வதி எனும் நல்மாதை மணம்புரிந்து சரோஜினிதேவி, சாரதாதேவி, சகுந்தலாதேவி, சாந்தகுமாரி, சத்தியபாமா, சுகந்தா, சாந்தி எனும் ஏழுநற் பெண்மக்களைப் பெற்று நன்கு பேணி வளர்த்து வந்தார். ஆசிரியப்பணியில் ஓய்வு பெற்றபின் கோழி வளர்ப்புத் தொழிலில் பெரும் ஊக்கத்துடன் உழைத்துயர்ந்தார்.

பெற்ற மக்கள் எழுவரையும் மணம் முடித்துக் கொடுத்து, நன்கு வாழக்கண்டு, பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழுக, என்று வாழ்த்தும் பதினாறு வகைச் செல்வங்களுள் ஒன்றான ஏழு மழலைச் செல்வங்களுக்கும் பதினாறு மழைச்செல்வங்கள் உண்டாக, பதினாறு பேரப்பிள்ளைகளையும் ஒரு பீட்டப்பிள்ளையினையும் கண்டின்புற்று இருந்தார்.

மூத்த மகளான சரோஜினி தேவிக்கு பிரபலவர்த்தகர் கணேசராசா அவர்களையும் (அமரர்) இரண்டாம் மகளான சாராதாதேவிக்கு தியாகராசமூர்த்தி எனும் நல்வரனையும் மூன்றாம் மகளான சகுந்தலா தேவிக்கு கிருஷ்ணமூர்த்தி எனும் நல்வரனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் மகளான சாந்தகுமாரிக்கு கிருஷ்ணதாஸ் எனும் நல்மணாளனையும், ஐந்தாம் மகளான சத்தியபாமாவிற்கு இரத்தினகுமார் எனும் நற்றுணைவரையும் ஆறாம் மகளான சுகந்தாவிற்கு ரவீந்திரன் எனும்நல்வரனையும், ஏழாம் மகளான சாந்திக்கு, பகீரதன் எனும் நல்வரனையும் மணமக்களாக்கி நல்வாழ்வு வாழவைத்து மாதவன், ஜெகதா, சதீஸ், அகிலா, பாலபவன், சுகந்தன், சுதா, கோகுலன், செந்தூரன், துவாரகா, சோயனா, மேனஜன், நிருகா, நிவேகா, ஆரனா, அனித் முதலான பேரப்பிள்ளைகளையும் ஆர்த்திகன் எனும் ஓர் பீட்டப்பிள்ளையினையும் கண்டு 86அகவை வரை நல்வாழ்வு வாழ்ந்து முதிர்வயதில் பூரண ஆயுளில் 2005ம் வருடம் வைகாசி மாதம் 27ம் நாள் செவ்வாய்க் கிழமை ரோகினி நட்சத்திரத்தில் அமாவாசையின் பின்னர் வரு துதியைத் திதியில் பூதவுடன் நீத்து புகழுடலுடன் இறைவனோடைக்கியமாயினார். அன்னாரின் ஆன்மா சாந்தியுற்று நற்கதியடைய வேண்டும் என எம் பெருமானைத் தியானித்து திருவைந் தெழுத்தோதி அன்னாரின் திருவுருவை நினைவில் நிறுத்தி அஞ்சலித்து ஆன்மாசாந்திக்குப் பிரார்த்திப்போமாகுக!

**ஓம் நமசிவாய! நமசிவாய! நமசிவாய!**
**சிவாயநம! ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய
## சகல கலா வல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணிந்தருள வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப்பி தந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட் கமலத்(து)
அஞ்சத் துவச முயர்ந்தோன் செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந் தெளிக்கும்வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித் தையுந்தந் தடிமைகொள் செல்விக் கரிதென்
றொருகால
முஞ்சிதை யாமைநல்குங் கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின்
தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்திலுள்ள**

# திருவெம்பாவை

**திருச்சிற்றம்பலம்**

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதரர் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்.!

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போது இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீஇவையுங் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்!

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் (று) அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர ஈசன் பழ அடியீர பாங்குடையீர
புத்தடியோம் புன்மைதீரத் தாட்கொண்டாற் பொல்லாதோ
எந்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கு ஏலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந் (து)
எண்ணிக்குறையில் துயில்ஏலோர் எம்பாவாய்!

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலமிடினும் உணராய் உணராய்காண்
ஏலக்குழலி பரிசுஏலோர் எம்பாவாய்!

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னும் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய் திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பா லோர் எம்பாவாய்!

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சென்னேம்கேள் வெவ்வேறாய் இன்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசுஏலோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டில்லையோ
வாழிஈ தென்ன உறங்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை யாமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடலோர் எம்பாவாய்!

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவர் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோம்ஏலோர் எம்பாவாய்!

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில்குலத்தரன்றன் கோயிற்பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசுஏலோர் எம்பாவாய்!

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல் பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமைஏலோர் எம்பாவாய்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆல்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தனிஇவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடு ஏலோர் எம்பாவாய்!

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப்பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புக்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக்குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடே லோர் எம்பாவாய்!

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்ந்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடுஏலோர் எம்பாவாய்!

ஓரொருகால் எம்பபெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தாள் பணியாள
போரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்!

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொளிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழைஏலோர் எம்பாவாய்!

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடே லோர் எம்பாவாய்!

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்!

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எம்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர் எம்பாவாய்!

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடே லோர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பொழுது, யாரால் கண்டுபிடிக்கப்பட்டது

| | ஆண்டு | பெயர் | இடம் |
|---|---|---|---|
| அச்சு | 1476 | கேக்ஸ்டன் | இங்கிலாந்து |
| கடிகாரம் | 1500 | பீட்டர் | ஜேர்மனி |
| கமரா | 1802 | தொமஸ்வெட்ஜ்உட் | அமெரிக்கா |
| புகைவண்டி | 1829 | ஸீடீவன்சன் | இங்கிலாந்து |
| தையல் மெஷின் | 1830 | தின்மானியர் | பிரான்சு |
| துப்பாக்கி | 1835 | கோல்ட் | அமெரிக்கா |
| டெலிபோன் | 1836 | அலெக்சாண்டர் | அமெரிக்கா |
| மின்சாரம் | 1843 | லாட்பிரதர்ஸ் | இங்கிலாந்து |
| பேனை | 1864 | வாட்டர்மென் | அமெரிக்கா |
| தட்டெழுத்துயந்திரம் | 1873 | சோபால் | இங்கிலாந்து |
| கிராமபோன் | 1876 | தொமஸ் அல்வாஎடிசன் | அமெரிக்கா |
| மோட்டார் | 1883 | ஹென்றி போர்டு | இங்கிலாந்து |
| டயர் | 1884 | டன்லாம் | இங்கிலாந்து |
| சினிமா | 1889 | தொமஸ் அல்வாஎடிசன் | அமெரிக்கா |
| றேடியோ | 1902 | மார்க்கோனி | இத்தாலி |
| விமானம் | 1903 | ரைட்சகோதாதரர்கள் | இங்கிலாந்து |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புப் பெயர்கள்

| | |
|---|---|
| அரபிக்கடலின் இளவரசி | :- கொச்சின் -இந்தியா |
| அற்றியாட்டிக் இளவரசி | :- வெனிஸ் -இத்தாலி |
| தெற்கின் இளவரசி | :- சிட்னி |
| பசுபிக் பெரிய பிரித்ததானியர் | :- யப்பான் |
| கிழக்கின் பெரிய பிரித்தானியர் | :- யப்பான் |
| ஆண்டீசின் முத்து | :- சிங்கப்பூர் |
| கீழ்த்தரிசன முத்து | :- கியூபா |
| இந்து சமுத்திரத்தின் திறவுகோல் | :- ஏடன் |
| மத்திய தரைக்கடலின் திறவுகோல் | :- ஜிப்றோல்டர் |
| இந்தியாவின் புண்ணிய நதி | :- கங்கை |
| இந்தியாவின் சுவிட்சர்லாந்து | :- காஸ்மீர் |
| இந்தியாவின் வாசனைத் தோட்டம் | :- கேரளா |
| இந்தியாவின் பூந்தோட்டம் | :- பெங்களூர் |
| இந்தியாவின் வாயில் | :- பம்பாய் |
| இங்கிலாந்தின் தோட்டம் | :- கெண்ட் |
| தெற்கு இங்கிலாந்து | :- நியூசிலாந்து |
| சீனாவின் துயர் | :- ஹீவாங்கோநதி |
| நைலின் கொடை | :- எகிப்து |
| ஆசியாவின் வெனிஸ் நகர் | :- சிங்கப்பூர் |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | :- சுவிற்சர்லாந்து |
| ஐரோப்பாவின் நோயாளி | :- துருக்தி |
| ஐரோப்பாவின் போர்க்களம் | :- பெல்ஜியம் |
| ஐரோப்பாவின் கோழிக்கூடு | :- நெதர்லாந்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் கூரை :- பமீர்முடிச்சு

உலகின் சர்க்கரைக்கிண்ணம் :- கியூபா

உலகின் ரொட்டிக்கூரை :- பிராப்ரிப்ஸ் - வடஅமெரிக்கா

ரொட்டி நாடு :- ஸ்கொட்லாந்து

புனித நாடு :- பாலஸ்தீனம்

கங்காரு நாடு :- அவுஸ்திரேலியா

தீவுகளின் நாடு :- பிலிப்பைன்ஸ்

தங்கக் கோபுர நாடு :- பர்மா

சனத்தொகை நாடு :- சீனா

வெள்ளை யானை நாடு :- தாய்லாந்து

அதிகாலை அமைதி நாடு:- கொரியா

சூரியோதய நாடு :- ஜப்பான்

சூரியாஸ்தமன நாடு :- இங்கிலாந்து

நள்ளிரவுச் சூரிய நாடு :- நோர்வே

கனவுக் கோபுர நகரம் :- ஒக்ஸ்போட் - இங்கிலாந்து

வானளாவிய நகரம் :- நியுயோர்க் - அமெரிக்கா

பொற்கதவு நகரம் :- சன்பிரான்சிஸ்கோ - அமெரிக்கா

மேப்பிள் பூமி :- கனடா

ஆலைகளின் நகரம் :- சிக்காக்கோ - அமெரிக்கா

அழியா நகரம் :- ரோம்

இரும்பு மனிதன் :- சதாம்ஹுசெயின்

இழிபிறப்பாளரின் துணைவி:- அன்னை தெரசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிந்து கொள்ளுங்கள் ..................

* மோனாலிசா எனும் உலகப் பிரசித்த பெற்ற ஓவியத்தை வரைந்தவர் - லியானாடோ டாவின்சி
* மெதேன் வாயுவை [உயிர்வாயு] அதிகளவு பயன்படுத்தும் நாடு - ஜப்பான்
* சீனியை அதிகளவு உற்பத்தி செய்யும் நாடு - கியூபா
* மகாத்மா காந்தி இறக்கக் காரணமானவனும் இறந்த ஆண்டும் - கோட்ஷே - 1948
* முதன் முதலில் எய்ட்ஸ் நோயைக் கண்டுபிடித்தவர் - லொக்மெனிட்டர் [U.S.A]
* இயற்கையாக இறவாத உயிரினம் - பக்ரீறியா
* இன்னும் மன்னராட்சி நிலவும் நாடுகள் - நேபாளம், ஜப்பான், மங்கோலியா, ஸ்பெயின், வடகொரியா, சவுதிஅரேபியா

## வரலாற்றில் புகழ் பெற்ற பிரமுகர்கள்

* வில்லியம் ஷேக்ஸ்பியர் - உலகப் புகழ் பெற்ற ஆங்கில நாடகாசிரியர்
* பெர்னாட்ஷா - ஆங்கில இலக்கியத் துறையில் புகழ் பெற்ற எழுத்தாளர்
* ரவீந்தரநாத் தாகூர் - கீதாஞ்சலி என்ற கவிதை நூலுக்கு நோபல் பரிசு பெற்றவர் இந்தியாவின் தேசிய கீதத்தை இயற்றியவர்
* கிட்லர் - நாஸிக் கொள்கையை வகுத்த ஜேர்மனிய சர்வாதிகாரி
* சோக்கிரட்டீஸ் - கிரேக்கத்தின் தலைசிறந்த தத்துவஞானி
* பிக்காசோ - நவீன ஓவியக் கலையின் தந்தை
* சாள்ஸ் டாவின்ஸ் - பரிணாம வளர்ச்சித் தத்துவத்தை வெளியிட்ட விஞ்ஞானி
* கிறிஸ்ரியன் பேனாட் - முதல் இதயமாற்று சத்திர சிகிச்சையைச் செய்த தென்னாபிரிக்க வைத்தியர்
* மா ஓ சேதுங் - சீனாவின் பொதுவுடமை அரசாங்கத்தை ஸ்தாபித்த பெருந்தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவதானியங்கள் 9

| | | |
|---|---|---|
| 1 நெல் | 2 கோதுமை | 3 துவரை |
| 4 உழுந்து | 5 பயறு | 6 மொச்சை |
| 7 கடலை | 8 எள்ளு | 9 கொள்ளு |

## நவரத்தினங்கள் 9

| | | |
|---|---|---|
| 1 முத்து | 2 பவளம் | 3 புஷ்பராகம் |
| 4 நீலம் | 5 மகரதம் | 6 மாணிக்கம் |
| 7 கோமேதகம் | 8 வைடூரியம் | 9 வைரம் |

## நவலோகங்கள் 9

| | | |
|---|---|---|
| 1 பொன் | 2 இரும்பு | 3 தாமிரம் |
| 4 ஈயம் | 5 வெள்ளி | 6 துத்தநாகம் |
| 7 நாகம் | 8 கஞ்சம் | 9 பித்தளை |

## பதினாறு பேறு [செல்வங்கள்] பெறுதல்

| | | | |
|---|---|---|---|
| 01 புகழ் | 02 கல்வி | 03 ஆற்றல் | 04 வெள்ளி |
| 05 நன்மைகள் | 06 பொன் | 07 நெல் | 08 அழகு |
| 09 பெருமை | 10 ஆயுள் | 11 நல்வூழ் | 12 இளமை |
| 13 அறிவு | 14 துணிவு | 15 நோயின்மை | 16 நுகர்ச்சி |

ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முக்கிய இடங்கள்

* உலகின் மிகப்பெரிய பூங்கா எந்த நாட்டில் உள்ளது?
கனடா
* உலகின் மிகவுயரமான கோபுரம் எங்குள்ளது?
கனடாவின் ரொரன்ரோ நகரில்
* அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தின் பெயர் என்ன?
வெள்ளை மாளிகை
* பிரித்தானியா மகாராணி இரண்டாவது எலிசபெத் வசிக்கும் மாளிகையின் பெயர் என்ன?
பக்கிங்ஹாம் மாளிகை
* இரஷியத் தலைவரின் வாசஸ்தலத்தின் பெயர் யாது?
கிரெம்ரின் மாளிகை
* உலகப் புகழ் பெற்ற ஈபல் கோபுரம் எங்கேயுள்ளது?
பிரான்ஸின் தலைநகர் பரிஸில்
* தியான் மென் சதுக்கம் அமைந்துள்ள நாடு எது?
சீனா
* உலகின் மிகப் பெரிய விமானப் போக்குவரத்து நிறுவனம்
ஏரோ புளோட் Aero Fot
* உலகின் மிகப்பெரிய தீபகற்பம் எது?
சவுதி அரேபியா தீபகற்பம்
* உலகின் மிகப்பெரிய தீவு எது?
கீரின்லாந்து
* உலகின் மிகப்பெரிய வளைகுடா எது?
மெக்சிக்கோ வளைகுடா
* உலகின் மிகப்பெரிய விரிகுடா எது?
சுவிற்சாலந்தில்
* உலகின் மிக நீளமான சுரங்கப்பாதை எங்கு அமைந்துள்ளது?
ஹட்சன் விரிகுடா
* உலகில் மிகப் பெரிய வங்கி எது?
பாங்க் ஒப் அமெரிக்கா
* உலகில் மிகப்பெரிய நூலகம் யாது?
அமெரிக்கா காங்கிரஸ் நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் மிகப் பெரியவை

| | |
|---|---|
| கண்டம் | ~ ஆசியா |
| சமுத்திரம் | ~ பசுபிக் |
| சமுத்திரம் [நீளம்] | ~ அத்திலாந்திக் |
| மலை [உயரம்] | ~ இமயமலை |
| மலை [நீளம்] | ~ அந்தீஸ் |
| சிகரம் | ~ எவரெஸ்ட் |
| தீவு | ~ கிறின்லாந்து |
| தீவுத்தொகுதி | ~ இந்தோனேசியா |
| தீவுத்தொகுதி | ~ இந்தோனேசியா |
| ஆறு | ~ அமேசன் |
| கடல் | ~ மத்தியதரை |
| நதி | ~ நைல் |
| குடாநாடு | ~ அரேபியா |
| நாடு [பரப்பளவு] | ~ ரசியா |
| நாடு [சனத்தொகை] | ~ சீனா |
| நகரம் [சனத்தொகை] | ~ டோக்கியோ |
| பாலைவனம் | ~ சஹாரா |
| ஏரி | ~ காஸ்பியன் |
| எரிமலை [உயரம்] | ~ குவலாத்திரி |
| எரிமலை [பரப்பளவு] | ~ மோனலோவா |
| நீல்வீழ்ச்சி | ~ ஏன்ஜெல் |
| நன்னீர் வாவி | ~ சுப்பீரியர் |
| வாவி | ~ கஸ்பியன்கடன் |
| உயரத்தில் உள்ள நாடு | ~ தீபேத் |
| உயரத்தில் உள்ள பட்டினம் | ~ வென்சுவான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ள வேண்டிய சில விடயங்கள்

உலகில் தேசியக்கொடி அற்ற ஒரே ஒரு நாடு?

மாசிடோனியா

மிகச் சிறிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு?

யப்பான் (புவரி)

மிகப் பெரிய தேசிய கீதத்தைக் கொண்ட நாடு?

கிரேக்கம் (128 வரி)

உலகில் மிக அதிக வெப்பமான இடம்?

லிபியாவிலுள்ள அல்ஜியா

உலகில் மிகப் குளிர்ந்த இடம்?

அந்தாட்டிக்கா

ஒசாமா பில்லேடன் தலைமையிலான தீவிரவாத இயக்கம்?

அல்கொய்தா

அல்கொய்தா இயக்கத்தால் செப்டெம்பர் 2001 தாக்கப்பட்ட இடம்?

அமெரிக்காவின் தலைநகரம் மீவாஷிட்டனிலுள்ள இராணுவதளம்,

நியூயோார்க்கிலுள்ள உலக வங்கி கட்டடம்

உலகில் மிக அதிகமானோர் பேசுகின்ற மொழி?

சீனமொழி

உலகின் முதல் சோதனைக் குழாய் குழந்தை?

லூயிஸ் பிறவுண்

அமெரிக்க அதிபரின் மாளிகை வெள்ளைமாளிகை எனப் பெயரிடப்பட்டது?

1972 இல்

உலகின் மிக உயரத்திலுள்ள வின்வெளி ஆராய்ச்சி நிலையம் உள்ள இடம்?

இந்தியாவில் இமயமலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்ப முடியாத உண்மைகள்

கங்காருவின் குட்டி பிறந்தவுடன் ஓர் அங்குல உயரந்தான் இருக்குமாம்

நத்தையின் வேகம் மணிக்கு 23 அங்குலம், பற்கள் 135

பிரான்ஸின் 1756. 06. 30 அன்று 9 வயதுச் சிறுமியொருத்தி ஓர் ஆண்குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

கடலில் வாழும் மீன்கள் கடல் நீரைக் குடிக்கின்றன. ஆனால் நன்னீர் வாழும் மீன்கள் நன்னீரைக் குடிப்பதேயில்லை.

1793 ஆம் ஆண்டு பிரான்ஸில் ஒரு குழந்தை நெற்றிக்கண்ணுடன் பிறந்தது.

யானையின் துதிக்கையில் மட்டும் 40,000 நரம்புகள் உள்ளன.

இரையே இல்லாமல் பாம்பு 25 மாதங்களும் தவளை 16 மாதங்களும் மூட்டுப்பூச்சி 6 மாதங்களும் உயிர் வாழுமாம்.

மிருகங்களுள் ஒரு சிறிய இதயமுள்ளது சிங்கம் தான் கலிபோர்னியாவிலே உள்ள பூனையொன்று நான்கு தலைகள் கொண்ட ஓர் குட்டியை ஈன்றெடுத்தது.

பொதுவான பெண் யானைகளுக்குக் கொம்பு முளைப்பதில்லை என்பது தான் பலருடைய அபிப்பிராயம் ஆனால் ஆபிரிக்காக்கண்டத்தில் உள்ள பெண் யானைகளுக்குக் கொம்பு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாள்கள் (தினம்)

ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனமான சில நாட்கள்

| | | | |
|---|---|---|---|
| மார்ச் | 08 | - | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் | 22 | - | சர்வதேச குடி தண்ணீர் தினம் |
| ஏப்பிரல் | 07 | - | சர்வதேச சுகாதாரத் தினம் |
| ஏப்பிரல் | 23 | - | சர்வதேச புத்தகத் தினம் |

(இது 1996ல் தான் முதன் முதலாக அறிவிக்கப்பட்டது)

| | | | |
|---|---|---|---|
| மே | 01 | - | சர்வதேச உழைப்பாளிகள் (தொழிலாளர் தினம்) |
| மே | 08 | - | சர்வதேச செஞ்சிலுவை செம்பிறை தினம் |
| மே | 15 | - | சர்வதேச குடும்பநல தினம் |
| மே | 17 | - | சர்வதேச தொடர்பு தினம் |
| மே | 31 | - | சர்வதேச புகையிலை மறுப்பு தினம் |
| யூன் | 05 | - | சர்வதேச சுற்றுச் சூழல் தினம் |
| யூன் | 26 | - | சர்வதேச போதை மருந்து எதிர்ப்பு தினம் |
| யூலை | 11 | - | சர்வதேச சனத்தொகைத் தினம் |
| யூலை | 28 | - | சர்வதேச அகதிகள் தினம் |
| செம்ரெம்பர் | 08 | - | சர்வதேச எழுத்தறிவு படிப்பறிவு நாள் |
| ஒக்டோபர் | 01 | - | சர்வதேச சிறுவர் தினம் |
| ஒக்டோபர் | 02 | - | சர்வதேச வயோதிபர் தினம் |
| ஒக்டோபர் | 06 | - | சர்வதேச ஆசிரியர் நாள் |
| ஒக்டோபர் | 15 | - | சர்வதேச வெள்ளைப்பிரம்பு நாள் |
| ஒக்டோபர் | 16 | - | சர்வதேச உணவு நாள் |
| ஒக்டோபர் | 21 | - | சர்வதேச விவசாய நாள் |
| ஒக்டோபர் | 24 | - | சர்வதேச ஐக்கிய நாடுகள் சபை நாள் |
| டிசம்பர் | 01 | - | சர்வதேச எய்ட்ஸ் நாள் |
| டிசம்பர் | 10 | - | சர்வதேச மனித உரிமைகள் நாள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகள் மேம்பட .....

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும் ஏற்பட்ட விரிசல்களை மேலும் பெரிதாகாமல் இருக்க:-

- நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள் ( Loose Talks)
- எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காக கையாளுங்கள் (Diplomacy) விட்டுக் கொடுங்கள் (Comromise)
- சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத் தான் ஆக வேண்டும் என்பதை உணருங்கள் (Tolerance)
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் ( Flexibility)
- மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும் ,இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesty)
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவங்க முன்வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கியமான மூன்று

- மதிக்க வேண்டியது மூன்று
  முதுமையானோர், மார்க்கம், சட்டம்
- நேசிக்க வேண்டியது மூன்று
  நேர்மை, தூய்மை, கடின உழைப்பு
- போற்ற வேண்டியது மூன்று
  அறிவு, அழகு, பண்பு
- பேணி வளர்க்க வேண்டியது மூன்று
  திருப்தி, தைரியம், மனமகிழ்ச்சி
- தவிர்க்க வேண்டியது மூன்று
  புகைத்தல், மருவருந்தல், சூதாடல்
- அடக்க வேண்டியது மூன்று
  நா, வேதனை, கோபம்
- கட்டாயம் கவனிக்க வேண்டிய மூன்று
  பேச்சு, நடைமுறை, செயல்கள்
- ஆதரிக்க வேண்டிய மூன்று
  வாக்குறுதி, நட்பு, பண்பு
- ஒழிக்க வேண்டியது மூன்று
  திருட்டு, சோம்பல், பொய்
- விரும்ப வேண்டியது மூன்று
  கருணை, நற்குணம், மனஅமைதி
- வெறுக்க வேண்டியது மூன்று
  பெருமை, அநீதி, வாக்கு மீறல்
- தப்பித்துக் கொள்ள வேண்டிய மூன்று
  தீய எண்ணம், பொறாமை, பிடிவாதம்
- அஞ்ச வேண்டிய மூன்று
  களவு, கோள், பொய்
- எதிர்கொள்ள வேண்டிய மூன்று
  கவலை, மரணம், பயணம்
- போரிட வேண்டிய மூன்று
  தேசம், கண்ணியம், நட்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சபை ( U.N.O)

ஐக்கிய நாடுகள் உணவு விவசாய ஸ்தாபனம்
FAO-Food and Agriculture Organization of the United Nations.

சர்வதேச அணுசக்தி முகவரகம்
IAEA-International Atomic Energy Agency

சர்வதேச தொழிலாளர் அமையம்
ILO-International Labour Organization

சர்வதேச வர்த்தக மையம்
ITC-International Trale Centre UNCTAD/WTO

ஐக்கிய நாடுகள் சூழல் திட்டம்
UNEP-United Nations Environment programe

ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசாரா அமையம்
UNESCO- United NationsEducational Scientific and Cultural Oraganization

ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம்
UNFPA- United Nations Population Fund

ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ் தானிகர் அமையம்
UNHCR- Office of the United Nations High Com missioner for Refugees

ஐக்கிய நாடுகள் வியாபார மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான மாநாடு
UNCTAD United Nations Conference on Trde and Development



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்
UNICEF-United Nations Children's Fund

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள்உயர்ஸ்தானிகர் அலுவலகம்
OHCHR-Office of the United Nations High Com missioner for Human Rights.

எச் .ஐ.வி எயிட்ஸ் மீதான ஐக்கிய நாடுகள் கூட்டுத்திட்டம்
UNAIDS-Joint United Nations Programme on HIV/AIDS

ஐக்கிய நாடுகள் தலைநகர அபிவிருத்தி நிதியம்
UNCDF -United Nations Capital Development Fund

ஐக்கிய நாடுகள் மனித குடியிருப்பகளுக்கான நிலையம்
UNCHS (Habitat) United Nations Centre for Hu man Settlements

ஐக்கிய நாடுகள் சமூக அபிவிருத்திக்கான ஆய்வு நிறுவனம்
UNRISD United Nations Research Institute forSocial Development

உலக உணவுத் திட்டம்
WFP-World Food Programme

உலக சுகாதார ஸ்தாபனம்
WHO-World Health Organization

உலக வங்கி
World Bank



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதன் முதல்

| | | |
|---|---|---|
| 01. | வருமானவரி விதித்த நாடு | - இங்கிலாந்து |
| 02. | பெண்களுக்கு வாக்குரிமை அளித்த நாடு | - நியூசிலாந்து |
| 03. | அறிவியல் மறுமலர்ச்சி ஏற்பட்ட நாடு | - இத்தாலி |
| 04. | அணுகுண்டை வெடிக்கச் செய்து ஆராய்ந்த நாடு | - பிரிட்டன் |
| 05. | மரம் நடும் இயக்கம் முதல் தோன்றிய நாடு | - சிங்கப்பூா |
| 06. | தற்கால வங்கி முறை முதன் முதலில் ஆரம்பித்த நாடு | - இத்தாலி |
| 07. | தேசியக் கொடியை முதலில் உருவாக்கிய நாடு | - டென்மார்க் |
| 08. | கலண்டரை முதலில் உருவாக்கியவர்கள் | - எகிப்து |
| 09. | முதல் கணனியின் பெயர் | - ஈனியாக் (ENLAC) |
| 10. | பூஜ்ஜியத்தை ஒரு எண்ணாக முதன் முதல் உபயோகித்தவர் | - பிரம்ம குப்தன் (இந்தியா) |
| 11. | முதல் தமிழ்ச்சங்கம் தோன்றியது | - தென்மதுரை |
| 12. | ஐ.நா.வின் முதல் செயலாளர் நாயகம் | - திரிக்விலி (நோர்வே) |
| 13. | கிரிக்கட் வீரர்களில் தபால் தலையில் முதலில் இடம் பெற்றவர் | - ஹரிசோபர்ஸ் |
| 14. | முதன் முதல் ஜேம்ஸ் பொண்டாக நடித்தவர் | - சீன்கானரி |
| 15. | ஆசியாக் கண்டத்தில் முதன் முதல் தொலைக்காட்சியை அறிமுகப் படுத்திய நாடு | - தாய்லாந்து |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐம்பெருங் கண்டத்தில் அடங்கும் சில நாடுகளின் தலைநகரங்கள்

| | |
|---|---|
| இலங்கை | ~ கொழும்பு (ஸ்ரீ ஜெயவர்த்தனபுர) |
| இந்தியா | ~ புதுடில்லி |
| பாகிஸ்தான் | ~ இஸ்லாமாபாத் |
| நேபாளம் | ~ காத்மண்டு |
| பூட்டான் | ~ திம்பு |
| வங்களாதேசம் | ~ டாக்கா |
| பர்மா | ~ ரங்கூன் |
| சீனா | ~ பீக்கிங் |
| ஹொங் ஹொங் | ~ விக்டோரியா |
| ஈரான் | ~ தெஹ்ரான் |
| ஈராக் | ~ பக்தாத் |
| இஸ்ரேல் | ~ ஜெருசலேம் |
| ஜோர்தான் | ~ அம்மான் |
| தென்கொரியா | ~ சோல் |
| குவைத் | ~ குவைத் |
| லெபனான் | ~ பெய்ரூத் |
| மலேசியா | ~ கோலாலம்பூர் |
| பிலிப்பைன்ஸ் | ~ மணிலா |
| சிங்கப்பூர் | ~ சிங்கப்பூர் |
| ஜப்பான் | ~ டோக்கியோ |
| இந்தோனேசியா | ~ ஜகார்த்தா |
| தாய்லாந்து | ~ பாங்கொங் |
| வியட்னாம் | ~ ஹனோய் |
| சவூதி அரேபியா | ~ றியாத் |
| ஆஜ்ஜென்ரீனா | ~ புவனர்ஸ் எயர்ஸ் |
| பிறேசில் | ~ பிறேசிலியா |
| இங்கிலாந்து | ~ லண்டன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் ...................

| | | | |
|---|---|---|---|
| 01) | தேயிலை ஆராய்ச்சி நிலையம் | – | தலவாக்கொல்லை |
| 02) | இறப்பர் ஆராய்ச்சி நிலையம் | – | அகலவத்தை |
| 03) | தெங்கு அராய்ச்சி நிலையம் | – | லுணுவில |
| 04) | சோயா அவரை நிலையம் | – | கன்னறுவா |
| 05) | ரயர் தொழிற்சாலை | – | களனி |
| 06) | சீமெந்து தொழிற்சாலை | – | காங்கேசன்துறை, புத்தளம், காலி |
| 07) | உருக்குத் தொழிற்சாலை | – | ஒருவெல |
| 08) | இரசாயன தொழிற்சாலை | – | பரந்தன் |
| 09) | மட்பாண்ட தொழிற்சாலை | – | பீலியந்தல |
| 10) | புகையிரத தொழிற்சாலை | – | இரத்மலான |
| 11) | ஓட்டுப்பலகை தொழிற்சாலை | – | ஜின்தோட்டை |
| 12) | காகித ஆலை | – | வாழைச்சேனை இம்பிலிப்பிட்டியா |
| 13) | கைத்தொழில் பேட்டை | – | எக்கல |
| 14) | கட்டிப்பால் தொழிற்சாலை | – | பொலநறுவை |
| 15) | ஆயுள்வேத ஆராய்ச்சி நிலையம் | – | மகா இலுப்பலாம |
| 16) | பருத்தி ஆராய்ச்சி நிலையம் | – | அம்பாந்தோட்டை |
| 17) | பண்ணை இயந்திர ஆராய்ச்சி நிலையம் | – | மகா இலுப்பலாம |
| 18) | எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் | – | சப்புகஸ்கந்த |
| 19) | புற்றுநோய் ஆராய்ச்சி நிலையமும் வைத்தியசாலையும் | – | மகரகம |
| 20) | குஷ்டரோக வைத்தியசாலை | – | கெந்தல |

அன்றைய உலகின் தீய பண்பு - கொடுமை
இன்றைய உலகின் தீய குணம் - தற்பெருமை பேசித்திரிதல்

- ஜார்ஜ்மூர் -

மனிதர் முன்னிலையில் நாம் செய்ய அஞ்சுவதை இறைவன் முன்னிலையில் சிந்திக்கவே அஞ்ச வேண்டும்.

- பெயில் பி. போர்ட்டியல்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவனங்கள்

01. SAARC - South Asian Association for Regional Co - operation
தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கான ஒத்துழைப்பு குழு

02. N.A.T.O - North Atlantic Treaty Organization
வட அத்திலாந்திக் ஒப்பந்த நிறுவனம்

03. W.T.O - World Trade Organization
உலக வர்த்தக நிறுவனம்

04. B.B.C - British Broadcasting Co - operation
பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

05. I.C.C - International Cricket Committee
சர்வதேச கிரிக்கற் சங்கம்

06. I.C.R.C - International Committee for Red Cross
சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்

07. I.O.C - International Olympic Committee
சர்வதேச ஒலிம்பிக் குழு

08. I.A.E.A - International Atomic Energy Agency
சல்வதெச அணுசக்தி முகவரகம்

09. P.L.O - Palastine Liberation Organization
பாலஸ்தீன விடுதலை இயக்கம்

10. N.G.O - Non Government Organization
அரச சார்பற்ற நிறுவனம்

11. C.I.A - Central Interlligent Agency
மத்திய புலனாய்வு முகவரகம்

12. W.H.O - World Health Organization
உலக சுகாதார நிறுவனம்

13. F.A.O - Food Agricultural Organization
உணவு விவசாய நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. A.D.B - Asian Development Bank
ஆசிய அபிவிருத்தி வங்கி

15. I.M.F - International Monotery Fund
சர்வதேச நிதி நிறுவனம்

16. E.E.C - Europeon Economic Community
ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம்

17. U.N.O - United Nations Organization
ஐக்கிய நாடுகள் நிறுவனம்

18. UNHCR - United Nation High commissioner for refugees
ஐக்கிய நாட்டு அகதிகள் நிறுவனம்

19. U.N.D.P - United Nation Development Programme
ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்

20. C.A.R.E - Co-operative for American Relief Every where
எல்லா நாடுகளுக்குமான அமெரிக்க நிவாரண உதவி

21. A.S.E.A.N - Association on South East Asian Nations
தென்கிழக்கு ஆசிய நிறுவனம்

22. U.N.I.C.E.F - United Nations International Childrens Education fund
ஐக்கிய நாடுகள் சர்வதேச குழந்தைகள் கல்வி நிதியம்

23. I.A.T.A - Internationl Air Transport Association
சர்வதேச விமானப்போக்குவரத்துக் கழகம்

24. U.N.E.S.C.O - United Nation Education Scientific and Cultural Organization
ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞானஅறிவியல் கலாச்சாரக் கழகம்

25. I.B.R.D - International Bank for Reconstruction and Development
உலகவங்கி மறுசீரமைப்பு அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

01. உலகில் மிகப்பெரிய கட்டிடம் எது?

கிஸே பிரமிட - எகிப்து

02. உலகில் மிகப்பெரிய விமான நிலையம் எத?

றியாட் விமான நிலையம் - சவூதி அரேபியா

03. உலகில் மிகப்பெரிய மாளிகை எது?

வத்திக்கான் மாளிகை - றோம்

04. உலகில் மிகப்பெரிய சிலை எது?

சுதந்திரச் சிலை - நியூயோர்க்

05. உலகில் மிகப்பெரிய ஆலயம் எது?

புனித பேதுரு ஆலயம் - ரோம்

06. தென்னாபிரிக்க நாடுகளில் ஏ.பி.சி நாடுகள் எவை?

ஆர்ஜென்ரீனா. பிறேசில். சில்லி

07. சூரியனைப் பூமி ஒருமுறை சுற்றி வரச் செல்லும் காலம் எவ்வளவு?

365 நாட்கள், 5மணி 48 நிமிடம் , 46 செக்கன்

08. பூமி தன்னைத் தான் சுற்றி வரச் செல்லும் காலம்?

23 மணித்தியாலம் 56 நிமிடம்

09. ஐ.நா.ஸ்தாபனத்தின் தலைமைக்காரியாலயம் எங்கு அமைந்துள்ளது?

நியூயோர்க்கில்

10. ஐ.நா.ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு?

24-10-1945

11. உலகில் இந்து நாடு எது.

நேபாளம்

12. உலகில் மிகப்பெரிய வங்கி எது?

Bank of America

13. உலகிலே மிகப்பெரிய வங்கி எங்கு உள்ளது?

யப்பான்

14. உலகிலே மிகப்பெரிய அரண்மனை எங்கே உள்ளது?

பீஜிங்

15. 2001 ஆம் ஆண்டிற்கு " WHITE BOOK OF YEAR" என்ற விருது எந்த நூலுக்குக் கிடைத்தது?

ENGLISH PASSANGER



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நோபல் பரிசு பெற்ற முதலாவது ஆசிரியர் யார்?
இரவீந்திரநாத் தாகூர்

17. உலக வானிலை ஆய்வு மையம் எங்கு நிறுவப்பட்டுள்ளது?
சுவிற்சிலாந்து

18. சக்கர வியாதிக்குப் பயன்படுத்தப்படும் இன்சுலின் என்ற மருந்து எவ் வெப்பநிலையில் வைத்துப் பாதுகாக்கப்படுகின்றது?
$2^0C - 8^0C$

19. உலக அகதிகள் தினம் எப்பொழுது கொண்டாடப்படுகின்றது?
யூன் 20

20. உலகில் டெஸ், கிறிக்கற் வரலாற்றில் அதிகூடிய விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர் யார்?
COURTNYWALSH

21. " காந்தி " திரைப்படத்தின் இயக்குனர் யார்? றிச்சர்ட் பரோட்

22. இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் எது? ஆர்யப்பட்ட

23. "LAND OF LILLIES " எனப்படும் நாடு எது? கனடா

24. மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம் எது?
நீலத் திமிங்கிலம் (500 வருடம்)

25. ஹொலிவூட் அமெரிக்காவில் எந்த மாநிலத்தில் உள்ளது?
லொஸ் ஏஞ்சல்ஸ்

26.71 பாடல்களைக் கொண்டு ஒரு திரைப்படம் தயாரிக்கப்பட்டது அதன் பெயர் எது?
இந்திரசபை

27. உலகின் மிகப்பெரிய தொலைநோக்கியின் பெயரட என்ன?
விஷன் 2002

28. ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களின் எண்ணிக்கை எத்தனை?
37

29. மூன்று விரியில் அமைந்த ஜப்பானிய கவிதை என்ன பெயரால் அழைக்கப்படுகின்றது? ஹைக்கூ

30. Big C என்று அழைக்கப்படும் நோய் எது? புற்று நோய்

31. ஆணுக்கும் ஆணுக்கும் திருமண உறவை முதன் முதலில் அங்கீகரித்த நாடு எது? டென்மார்க்

32. உலகின் மிகப் பெரிய கம்பியூட்டர் நிறுவனம் எது? இன்ரெல்

33. உலகின் மிகப்பெரிய அலுவலகக் கட்டிடம் எது?
அமெரிக்காவின் பென்டகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய தினங்கள்

| | | |
|---|---|---|
| தேசிய சுங்க தினம் | ஜனவரி | ~ 26 |
| உலக மகளிர் தினம் | மார்ச் | ~ 08 |
| உலக சுகாதார தினம் | ஏப்ரல் | ~ 07 |
| தேசிய தொழிலாளர் தினம் | மே | ~ 01 |
| உலக செஞ்சிலுவைச் சங்க தினம் | மே | ~ 08 |
| உலக தகவல் தினம் | மே | ~ 17 |
| ஐரோப்பிய நாடுகள் தினம் | மே | ~ 24 |
| ஹிரோசிமா தினம் | ஆகஸ்ட் | ~ 06 |
| உலக சமாதான தினம் | ஆகஸ்ட் | ~ 06 |
| நாகசாகி தினம் | ஆகஸ்ட | ~ 09 |
| உலக இலக்கிய தினம் | செப்டெம்பர் | ~ 08 |
| வயது முதிர்ந்தேர் தினம் | ஒக்டோபர் | ~ 01 |
| உலக மிருக தினம் | ஒக்டோபர் | ~ 02 |
| உலக உணவு தினம் | ஒக்டோபர் | ~ 16 |
| உலக தபால் தினம் | ஒக்டோபர் | ~ 09 |
| ஐக்கிய நாடுகளின் தினம் | ஒக்டோபர் | ~ 24 |
| எயிட்ஸ் எதிர்பு தினம் | டிசம்பர் | ~ 01 |
| மனித உரிமைகள் தினம் | டிசம்பர் | ~ 10 |

01. ஐ.நா. தினம் கொண்டாடப்படும் நாள்? அக்டோபர் 24
02. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள்? 166
03. இவர்களுள் முழு அதிகாரம் பெற்ற நிரந்தர அங்கத்துவ நாடுகள்?
பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ருஷ்யா, சீனா
04. ஐ. நாவின் சர்வதேச நீதிமன்றம் அமைந்துள்ள இடமும்,
அங்க கடமை புரியும் நீதி அரசர்களின் தொகையும்?
நெதர்லாந்தில் உள்ள ஹேக் நகரம், நீதி அரசர்கள் 15பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேசத் தகவல்கள்

ஆசியாவில் ஊழல் மிகுந்த நாடுகளாக இந்தியாவும் இந்தோனேசியாவும் இருப்பதாக ஊழலுக்கு எதிரான அமைப்பு தெரிவித்துள்ளது. ஊழல் குறைந்த நாடாக ஜப்பான் உள்ளதாம்.

உலகிலேயே குற்றங்களுக்கு எதிராகக் கடுமையான தண்டணை வழங்கும் நாடுகளில் முதன்மை இடத்திலிருப்பது சீனாவாகும். கடந்த வருடம் ஒரே மாதத்தில் 90பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதாம்.

உலகிலேயே மிக அதிகளவு பொருளியல் சுதந்திரத்தை அனுபவிக்கும் நாடுகளின் வரிசைப்பட்டியலில் சிங்கப்பூர்,ஹொங்ஹொங், அமெரிக்கா ஆகிய நாடுகள் முதன்மை நிலையில் உள்ளன.

உலகின் மிகப்பெரிய பணக்காரர் பில்கேட்ஸ் ஆவார். இவர் "மைக்ரோ சொவற்" என்ற கம்பியூட்டர் நிறுவனத்தின் உரிமையாளராவார். இவரின் சொத்து 56.8 பில்லியன் டொலர் ஆகும். அதாவது 71 1/2 இலட்சம் கோடி ரூபா ஆகும்.

உலகின் மிகநீண்ட குழாய்ப்பாதை இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ளது. குஜராத் மாநிலத்திலிருந்து மூன்று மாநிலங்களினூடாக உத்தரப் பிரதேசம் வரை 1670Km இப்பாதை அமைந்துள்ளது. இதற்கான செலவு 1660 கோடி ரூபாவாகும்.

உலகின் உயர்ந்த மலைச்சிகரமான எவரெஸ்ட் சிகரத்தில் மிகக் குறுகிய நேரத்தில் ஏறியவர் என்ற சாதனை படைத்தவர் நேபாள நாட்டு வீரர் பாபு சிசிக்சேட்டா ஆவார். இவர் பத்துத் தடவைகள் ஏறியிருந்தார். ஒருதடவை 21 மணித்தியாலங்கள் ஒட்சிசன் வாயுக்கவசம் இல்லாமல் தங்கியிருந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் முதலாவது விண்வெளிச்சுற்றுலாப் பயணி டெனிஸ்டிட்டோ என்பவர். இவர் அமெரிக்க தொழிலதிபர் ஆவார். இவர் 60வது வயதில் மே. 2001 ல் ரஷ்யாவிடம் 2 கோடி டொலர் கட்டணம் செலுத்தி சர்வ தேச விண்வெளி நிறுவனத்துக்குச் சுற்றுலா சென்று திரும்பியுள்ளார். இரண்டு வீரர்களுடன் இவர் சென்ற ரஷ்ய விண்கலம் "சோயுஸ் விண்கலம்" ஆகும்.

ஆபிரிக்கக் கண்டத்தின் வடமேற்கு நாடாக இருப்பது அல்ஜீரியா. இதன் தலைநகர் அல்ஜீரியர்ஸ் ஆகும். இது இஸ்லாம் சமயத்தைக் கொண்டது. பிரெஞ், அரபி என்பவை மொழிகளாக உள்ளன. 1962ல் இது சுதந்திரம் பெற்றது. அன்று முதல் "தேசிய விடுதலை முன்னணி" என்ற ஒரோ கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகிறது.

கடலுக்கு அடியில் சென்றவாறு அங்குள்ள கனியவளங்களைச் சேகரிக்கக் கூடிய வாகனமொன்றை உலகில் முதன்முறையாக இந்தியா பரீட்சித்துள்ளது. இதன்மூலம் 6000மீற்றர் ஆழம்வரை சென்ற கனியப்பகுப்பில் ஈடுபடமுடியும். 12தொன் நிறையுள்ள இந்த வாகனம் கடலுக்கடியில் கனியங்களைத்தேடிச் சேகரித்து அவற்றைக் கடலுக்கு மேலுள்ள கலத்திற்கு அனுப்பி வைக்குமாம்.

உலகில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பில் முதன்மையிடத்தில் இருப்பது ரஷ்யா ஆகும். ஆசியாவில் முதலாம் இடத்திலும் உலகில் இரண்டாவது இடத்திலும் இருப்பது இலங்கையே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்ரநெற் ~ INTERNET

* உலகெங்கிலும் உள்ள கம்பியூட்டர்களின் ஒருங்கிணைப்பே இன்ரநெற் ஆகும். உலகத்தின் எந்த மூலையிலுள்ள மனிதர்களும் எந்த நேரத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஒருவருக்கொருவர்தொடர்பு கொள்ளவும் தகவல்களைத் தேடிப்பெறவும் உதவுகிறது இன்ரநெற் என்ற சாதனம்.

* 1969ம் ஆண்டு இராணுவ ஆராய்ச்சிப்பணிகளுக்காக இராணுவத்துக்குரிய கம்பியூட்டர்களை இணைக்கும் முறை அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது தான் இன்ரநெற்றின் ஆரம்பவித்தாகும். தனிநபர்களுக்கு இன்ரநெற் இணைப்பு கொடுக்கும் முறை 1990ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது.

* இன்ரநெற் மூலம் கடிதப் போக்குவரத்துச் செய்ய உதவுகின்ற ஒரு அமைப்பு ஈமெயில் (**E-Mail**) எனப்படும்.

* இன்ரநெற்றின் பயன்பாடுகளை ஒரு வரையறைக்குள் கொண்டுவர இயலாது. உலகத்தையே வலைபோலப் பின்னி தன்னகத்தே தகவல் களஞ்சியமாக பதிவு செய்து வைத்துக்கொண்டுள்ளது.

(i) பல பத்திரிகைகள் சஞ்சிகைகள் தங்கள் செய்திகளை வீட்டிலிருந்தே மக்கள் படிப்பதற்குரியதாக இணைப்பை ஏற்படுத்தியுள்ளன.

(ii) பல விளம்பரதார்கள் தமது வியாபாரப் பொருட்கள் பற்றிய விளம்பரங்களை இதன்மூலம் பிரபல்யப்படுத்துகின்றார்கள்.

(iii) உலகப் பொதுவிடயம் பற்றிய ஒரு தகவலைப் பெறவேண்டுமாயின் குறிப்பிட்ட விடயத்தை இன்ரநெற்றில் பார்த்து உடனே அறிய முடியும்.

(iv) வீட்டிலிருந்தே கொண்டே பயணப்பதிவுகள், திரையரங்குப் பதிவுகள் விமானப் பதிவுகள் செய்து உறுதி செய்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(v) பரீட்சை முடிவுகள், விண்ணப்பங்கள் பற்றிய திருத்தங்கள் என்பவற்றையே நேரடியாக வீட்டிலிருந்தே செய்து கொள்ள முடியும்.

(vi) கடைகளில் பொருட்களைப் பெறவோ, வங்கிகளில் பணத்தை மாற்றி வேறொருவருக்கு அனுப்புவதோ இன்ரநெற் மூலம் உரிய இடங்களுக்குச் செல்லாமலே செய்து கொள்ளமுடியும். வாங்கிய பொருள் வீட்டுக்கு வந்து சேருகிறது.

(vii) வேலைவாய்ப்புக்கள் எங்கு உள்ளன என்பதை இன்ரநெற் மூலம் அறிந்து உடனடியாக விண்ணப்பத்தையும் அனுப்பி உடனேயே முடிவையும் அறியக்கூடிய வசதி ஏற்படுகிறது.

(viii) ஈ–மெயில் மூலம் தகவல்களை நொடிப் பொழுதில் அனுப்பி அதற்கான பதிலையும் பெற்று உறுதி செய்யவும் இது உதவுகின்றது.

(ix) ஈ–மெயில் மூலம் செய்தி எழுத்து வடிவத்திலேயே பரிமாற்றப் படுகிறது. ஆனால் இன்ரநெற் தொலைபேசி மூலம் விபரங்களை எழுத்து வடிவத்தில் பார்ப்பதுடன் உரியவரின் குரல் மூலமான விளக்கத்தையுத் பெறமுடிகிறது.

(x) தகவல் பரிமாற்ற சாதனங்களுள் மிகக்குறைந்த செலவிலும், குறுகிய நேரத்திலும் தகவல் பரிமாற்றஞ் செய்து கொள்ள இன்ரநெற் உதவுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்மொழிகள்

வருவாய்க்கும் குறைவாகச் செலவு செய்ய நீங்கள் கற்றுக் கொண்டால் உங்களை விடப் பணக்காரர் எவரும் இல்லை.

– ப்ராங்க்ளின் –

ஒருவனுக்கு சுதந்திரம் தருவது அவனுடைய வசதியோ, வருமானப் பெருக்கமோ அல்ல, அவனுடைய தேவைகளின் பெருக்கமே.

– வில்லியம் காபெட் –

நன்மையைச் செய்யுங்கள் யாருக்கு என்று மட்டும் கேட்காதீர்கள்

– யூதப் பழமொழி –

புத்தகம் கைக்குள் அடங்கிவிடக்கூடிய பூந்தோட்டம்.

– அரேபியப் பழமொழி –

முதற் குழந்தை தந்தையின் முதல் நண்பன்.

– ஆபிரிக்கப்பழமொழி –

காத்துக் கொண்டிருப்பது பெரிய விஷயமல்ல, ஆனால் பிறரைக் காக்க வைப்பதே துன்பம்

– கண்ணதாசன் –

பணத்தை உங்களுக்கு அடிமையாக்குங்கள், இல்லையேல் அது உங்களை அடிமையாக்கிவிடும்

– இத்தாலியப் பழமொழி –

எத்தகைய புயலும் காற்றும் திறமைமிக்க கப்பலோட்டிக்கு சாதகமாகவே இருக்கும்

– கிப்பன் –

உழைப்பு உடலைப் பலப்படுத்தும். கஸ்டங்கள் மனதைப் பலப்படுத்தும்.

– பிளமிங் –

கூடப் பிறந்த சகோதரன் என்பவன் இயற்கையே நமக்கு அளித்துள்ள சிறந்த நண்பன்

– பிரான்ஸ் பழமொழி –


குறிக்கோளை அடையும் முயற்சியில் தான் மனநிறைவு இருக்கிறது. அடைவதில் இல்லை முழு முயற்சியே முழுவெற்றி.

– காந்திஜீ –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேற்றம்



மண்ணிற் பிறந்தவர் யாருமிங்கொரு நாளில்முடிவுறுவர்
எண்ணிப் பாரிதை எல்லாமவன் செய லெம்மாலாவதெது
பண்ணிப் பெருக்கிய பாவம் புண்ணியம் தாமே யெம்பிறப்பாம்
எண்ணிக் கொள்ளிதை ஈசனடிக்குநீ ஏகும்வழிதொடரே.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்





எமது அன்புத் தெய்வம் நோயுற்ற மரணப்
படுக்கையில் இருந்த வேளையிலும் அவரது உயிர்
பிரிந்த வேளையிலும் உடன் உதவிய உற்றார், உறவினர்
நண்பர்களுக்கும், இறுதிச் சடங்கிலும் இறுதி ஊர்வலத்திலும்
சிரமம் பாராது வருகை தந்தோருக்கும், எமது துயர் ஆறத்
தொலைபேசி மூலமும், கடித மூலமும் அனுதாபச் செய்திகள்
அனுப்பியோருக்கும், அறிந்தறிந்து வந்து ஆறுதல் கூறியவர்
களுக்கும், இறுதிச் சடங்குகளைச் செய்த சிவாச்சாரியார்
களுக்கும், இம்மலரினை அழகிய முறையில் அச்சிட்டுத்
தந்த Global Computer Printers நிறுவனத்தினருக்கும்,
அந்தியஸ்தி நிகழ்வில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும்
எமது கரம்கூப்பிய சிரம் தாழ்த்திய நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.



புத்தளை

இங்ஙனம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி

**வீரகத்தியர் பார்வதிப்பிள்ளையார்**

- இலட்சுமிப்பிள்ளை
  - சோமசுந்தரம் + சின்னாச்சிப்பிள்ளை
    - சரஸ்வதி
- வள்ளிப்பிள்ளை
- தெய்வானைப்பிள்ளை
- **சுப்பிரமணியம்**

சரஸ்வதி + சுப்பிரமணியம்

- சரோஜினிதேவி + கணேசராசா
  - ஜெகதா
  - அகிலா
  - பாலபவன்
  - அகிலா + சதிஸ்
  - ஜெகதா + மாதவன்
    - ஆர்த்திகன்
- சாரதாதேவி + தியாகராஜமூர்த்தி
  - சுகந்தன்
  - சுதா
- சகுந்தலாதேவி + கிருஸ்ணமூர்த்தி
  - கோகுலன்
  - செந்தூரன்
  - துவாரகா
- சாந்தகுமாரி + கிருஸ்ணராசா
  - சோபனா
  - மேனஜன்
- சத்தியபாமா + இரத்தினகுமார்
- சுகந்தா + ரவீந்திரன்
  - நீருகா
  - நிவேகா
- சாந்தி + பகீரதன்
  - ஆரணா
  - அனித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–

*Global Computer Printers, Manthikai*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org